सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

யாழ்ப்பாணம்

## செய்திக்குறிப்பு - மஹாத்மா காந்தி புலமைப்பரிசில்

கொழும்பிலுள்ள கல்வியமைச்சின் ஏற்பாட்டில் 150 திறமைசாலி மாணவர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதியன்று கௌரவ கல்வியமைச்சர் பந்துலகுணவர்த்தன, இலங்கைக்கான இந்தியத்தூதுவர் மேன்மைமிகு வை.கே.சின்ஹா ஆகியோர் முன்னிலையில் மஹாத்மாகாந்தி புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் கல்வியமைச்சின் உயரதிகாரிகள், பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கலந்து கொண்டனர்.

2. 2006 முதல் வழங்கப்படும் மஹாத்மாகாந்தி புலமைப்பரிசில் வழங்கல் இம்முறை 7ஆவது தடவையாகவும் வழங்கப்பட்டது. இந்த 150 மாணவர்களும் திறமை மற்றும் தேவைஅடிப்படையில் 25 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். இப்புலமைப்பரிசிலின் பகுதியாக மாதாந்தம் ரூபா 2000 என்ற அடிப்படையில் ஒவ்வொரு மாணவருக்கும் தமது உயர்தரக்கல்வியை பூர்த்திசெய்வதற்காக ரூபா 48,000 இரண்டுவருடங்களில் வழங்கப்படும்.

3. வைபவத்தில் உரையாற்றும் போது கல்வியமைச்சின் செயலாளர் திரு.அனுரதிஸாநாயக்க அவர்கள் இலங்கையில் திறமையான மற்றும் தேவையுள்ள 150 மாணவர்களுக்கு மஹாத்மாகாந்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுவதை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்தப் புகழ்வாய்ந்த புலமைப்பரிசில் தேவையுள்ள பலமாணவர்கள், தமதுக.பொ.த. உயர்தரக் கல்வியைத் தொடரவும் பூர்த்திசெய்யவும் உதவி புரிந்துள்ளதாகக் கூறினார். புலமைப்பரிசுத் தொகையை ரூபா 2000 ஆக உயர்த்தியமைக்கும், 2012 முதல் பரிசுபெறும் மாணவர் எண்ணிக்கையை 50 சதவீதத்தால் 150 ஆக அதிகரித்தமைக்கும் இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

4. இந்திய இலங்கை உறவுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தாபிக்கப்பட்டதாக தெரிவித்த கௌரவ கல்வியமைச்சர் பந்துலகுணவர்த்தன அவர்கள் இலங்கையின் அபிவிருத்தித் தேவைகள் பலவற்றுக்கு இந்தியா உதவும் கரங்களாக இருந்துள்ளமையைக் குறிப்பிட்டார். இந்தியாவானது தனது உதவிகளை கல்வித்துறைக்குபல்வேறு இந்தியக் கல்வி நிறுவனங்களில் ஆசிரியப் பயிற்சி வழங்கல், விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழிநுட்பம் போன்ற பாடங்களின் கலைத்திட்ட விருத்தி மற்றும் 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகளுடன் இணைந்துள்ள 5000 ஆரம்ப

நிலைப் பாடசாலைகளை அபிவிருத்திசெய்யும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கல் உள்ளிட்ட பலவழிகளில் வழங்கியுள்ளது. இந்தியத் தூதரகத்துக்கும் இந்திய அரசுக்கும் பெறுமதியான இவ்வுதவிகளுக்காக நன்றி தெரிவித்ததுடன் மஹாத்மாகாந்தி புலமைப்பரிசில் திட்டமானது இலங்கைப் பிள்ளைகளுக்கு ஒருவரப்பிரசாதமாகும் எனவும் தெரிவித்தார்.

5. வைபவத்தில் உரையாற்றுகையில் இந்தியத் தூதுவர் மேன்மைதங்கிய வை.கே.சின்ஹா அவர்கள் இருபக்க உறவில் கல்வி மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு நிரந்தரமான கூறு எனத் தெரிவித்தார். இந்தியாவின் முயற்சியானது இந்த உறவுகளை தொடர்ச்சியாக மேம்படுத்தும் வகையிலும் பலப்படுத்தும் வகையிலும் உள்ளது. இம்முயற்சியில் வழங்கப்படும் புலமைப்பரிசிலை மும்மடங்காக அதிகரிப்பதில் பாரிய முன் முயற்சியாக நடைபெறுவதாக தெரிவித்தார். மஹாத்மாகாந்தி புலமைப்பரிசில் பெறுவோர் கல்வியில் திறமையைக் காட்டியுள்ளதுடன் இந்தியதேசபிதாவின் இலட்சியங்களைப் பின்பற்றுவர் என நம்பலாம். கடந்தகாலங்களில் இப்புலமைப்பரிசிலைப் பெற்றவர்களில் சிலர் தாம் தெரிவுசெய்தபட்டப்படிப்புத் துறைகளிலும் அதன் பின்னரும் அதிக திறமையை வெளிப்படுத்தியுள்ளமையை நோக்கும் போது உற்சாகமளிப்பதாகவுள்ளது. இந்தமாணவர்கள் மஹாத்மாகாந்தியின் சமாதானம் மற்றும் அஹிம்சை பற்றிய இலட்சியங்களைப் பின்பற்றுவர் என்ற தனது திடமான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

6. இவ்வருடம் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 36 மாணவர்கள் 2013-2015 காலப்பகுதிக்கான மஹாத்மாகாந்தி புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொண்டனர். விபரங்கள் வருமாறு

| மாவட்டம் | புலமைப்பரிசிலின் எண்ணிக்கை | பாடசாலைகளின் பெயர்கள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 6 | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்,சாவகச்சேரி இந்துக் கல்லூரி, |
| கிளிநொச்சி | 6 | கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சிமத்தியகல்லூரி, |
| முல்லைத்தீவு | 6 | புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, |
| வவுனியா | 6 | வவுனியா மத்திய மகா வித்தியாலயம், ரம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, தமிழ் மத்திய மகாவித்தியாலயம், விபுலானந்தக் கல்லூரி |
| மன்னார் | 6 | தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை, புனித சேவியர் ஆண்கள் கல்லூரி, முசலி மகாவித்தியாலயம், வங்காலை புனித ஆன் மத்தியமகாவித்தியாலயம். |

7. இந்தியத் தூதுவர் மேலும் தெரிவிக்கையில் இந்தியாவில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு 270 இடங்கள் இலங்கை மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். நாம் யாருடைய முன்னேற்றத்திற்கு அதிக முக்கியமளிக்கிறோமோ அந்த இலங்கை இளைஞர்களை இந்தப் புலமைப்பரிசில்களின் முழுப்பயனையும் அனுபவிக்கும்படி இந்திய அரசு ஊக்குவிக்கிறது. இந்தியாவின் இந்த முயற்சிகளின் பின் உள்ள துடிப்பாக அமைவது மஹாத்மாகாந்தி பல தசாப்தங்களின் முன்னே கூறிய "…அனைவருக்கும் கல்வி, வாழ்க்கை ஊடாகக் கல்வி மற்றும் வாழ்க்கை முழுவதும் கல்வி" என்பதாகும்.

…

பெப்ரவரி 2 2014